# TVSSC – TAMIL

**STD: X** **TIME: 3 HRS**
**SUBJECT: TAMIL** **MARKS: 80**

பகுதி – அ
படித்தல் திறன் ( 15 மதிப்பெண்)

1) பின்வரும் பத்தியைப் படித்து, அதன் கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்வு செய்க. **[5]**

பூமியின் கிழக்கு வாசலாகத் திகழும் நமது இந்திய நாடு பல புதுமைகளைச் செய்த நாடு. நமது நாடு அணிந்திருக்கும் ஆடையாக திருக்குறள் விளங்குகிறது. உண்மைகளைப் போற்றும் இந்தியத் தாய்க்கு மெய்யுணர்வே மேலாடையாக விளங்குகின்றது. காளிதாசர் இயற்றிய இனிமையான பாடல்கள் காவிரிக்கரை வரை எதிரொலிக்கின்றன. கம்பரின் அமுதம் போன்ற கவிதை வரிகளுக்குக் கங்கை ஆற்றின் அலைகள் இசையமைக்கின்றன. குமரிமுனை ஆகிய கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாக தொடுக்கப்படுகின்றன.

மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன. புல்வெளிகள் எல்லாம் பூக்கள் மலர்ந்து பொற்காலமாகப் புன்னகை புரிகின்றன. கல்லில் செதுக்கிய சிற்பங்கள் யாவும் காவியக் கலைக்கூடமாகக் காட்சி தருகின்றன. அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக அன்னை பாரத நாடு திகழ்கிறது. நம் நாடு பிறநாட்டு மக்களின் பசியையும் போக்கி வருகின்றது. அறத்தின் ஊன்றுகோலாக காந்தியடிகளின் அகிம்சை என்னும் சிறிய கைத்தடி விளங்குகிறது என்று தாராபாரதி தனது கவிதையில் கூறியுள்ளார்.

வினாக்கள் :

i) நமது இந்திய நாடு அணிந்திருக்கும் ஆடையாக விளங்கும் நூல் எது?
அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம் இ) திருக்குறள் ஈ) திருவள்ளுவமாலை

ii) யாருடைய பாடல்கள் காவிரிக்கரை வரை எதிரொலிக்கின்றன?
அ) கம்பர் ஆ) காளிதாசர் இ) வள்ளுவர் ஈ) தாராபாரதி

iii) காவியக் கலைக்கூடமாகக் காட்சி தருவன எவை?
அ) சுவரில் வரைந்த ஓவியங்கள் ஆ) புன்னகை புரியும் பூக்கள்
இ) இனிமை மிகுந்த பாடல்கள் ஈ) கல்லில் செதுக்கிய சிற்பங்கள்ை

iv) எந்த ஆற்றின் அலைகள் கம்பரின் அமுதம் போன்ற கவிதை வரிகளுக்கு இசையமைக்கின்றன?
அ) கங்கை ஆற்றின் அலைகள் ஆ) காவிரி ஆற்றின் அலைகள்
இ) குமரி முனை அலைகள் ஈ) வைகை ஆற்றின் அலைகள்

v) எதன் ஊன்றுகோலாக காந்தியின் அகிம்சை என்னும் சிறிய கைத்தடி விளங்குகின்றது?
அ) அமைதியின் ஊன்றுகோலாக ஆ) அறத்தின் ஊன்றுகோலாக
இ) அழகின் ஊன்றுகோலாக ஈ) அதிகாரத்தின் ஊன்றுகோலாக

2) பின்வரும் பத்தியைப் படித்து, அதன் கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்வு செய்க **[5]**

அக்காலத்தில் பல்வகை அரண்கள் நாட்டுக்குக் காவலாக இருந்தன. நகரைச் சூழக் காட்டரண் உண்டு. அது மிளை எனப்பட்டது. கோட்டைகள் விண்தோய் உயர்வுடையன. அவற்றைச் சூழ ஆழமான அகழிகள் உண்டு. அகழிகளில் முதலைகள் நீந்திக் கொண்டிருந்தன. அகழிகளைப் படகுகளின் உதவியால் தான் கடக்க முடியும். மதில்களை இஞ்சி, புரிசை,அகப்பா என்று குறித்துள்ளனர். கோட்டை மதிலின் உள்வட்டமே அகப்பா. சமவெளிகளில் இருந்த சிறு அரண் குறும்பு எனப்பட்டது. கோட்டைச் சுவர்கள் செம்பினால் செய்யப்பட்டன போல் இருந்தன. எனவே, “செம்பு புனைந்தியற்றிய சேணெடும் புரிசை” என்று பாராட்டினர். கோட்டைக்கு உள்ளே வீரர்கள் நின்று போரிடும் இடம் ஞாயில் எனப்படும். வீராகள் நின்று அம்பு எய்யும் இடம் ஏப்புழையாகும். கோட்டைக்கு இரண்டு சுற்றுச் சுவர் உண்டு. மதிலில் கொடிகள் அசையும் இரட்டைக் கதவுகள் உண்டு. கோட்டை மதிலின் மேல் பல பொறிகள் அமைக்கப்பட்டன. அவை சிலப்பதிகாரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கோட்டையைக் கைப்பற்றிய பின் பொருள்களைக் கவர்ந்து தமக்குள் பங்கிட்டுக் கொள்வர். அந்நாட்டுக் கொடியை நீக்கிவிட்டுத் தம் நாட்டுக் கொடியை நாட்டுவர்.

வினாக்கள்

i) அக்காலத்தில் நாட்டிற்குக் காவலாக அமைந்தவை யாவை?
அ) கடல்கள் ஆ) அரண்மனைகள் இ) வீடுகள் ஈ) அரண்கள்

ii) கோட்டைக்குள் வீரர்கள் நின்று போர்புரியும் இடம் ________
அ) ஞாயில் ஆ) இஞ்சி இ) செம்பு ஈ) ஏப்புழை

iii) கோட்டையைக் கைப்பற்றிய பின் என்ன நிகழும்?
அ) அரசனைச் சிறை பிடிப்பர் ஆ)அகழியில் தப்பிச் செல்வர்
இ) வீரர்களைப் பாராட்டுவர் ஈ) வென்றவர் தம் நாட்டுக் கொடியை நாட்டுவர்

iv) அகழிகளை எவ்வாறு கடக்க முடியும்?
அ) நீந்திக் கடக்க முடியும் ஆ) படகுகளின் உதவியால் கடக்க முடியும்
இ) பாலத்தின் மூலம் கடக்க முடியும் ஈ) கயிறு மூலம் கடக்க முடியும்

v) கோட்டை மதிலின் உள்வட்டத்தை எவ்வாறு குறித்துள்ளனர்?
அ) இஞ்சி ஆ) புரிசை இ) அகப்பா ஈ) மிளை

3) கீழ்க்காணும் பகுதியை படித்துப் பொருளுணர்ந்து, மையக் கருத்து மாறாமல் அதனை மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக. **[5]**

மழைநீர் சேகரிப்பு என்பது மழைநீரை வீணாக்காமல் சேமித்து வைப்பது ஆகும். மழைநீரை சேகரித்து பொது மக்களின் குடிநீர் தேவைகளுக்கும், கால்நடைகளுக்கும் நீர்பாசனத்திற்கும் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கும் பயன்படுத்தலாம். மழைநீர் ஒன்றே எளிதில் கிடைக்கக்கூடிய, சிக்கனமான நீர் ஆதாரம். இத்திட்டம் உள்ளூரிலேயே கிடைக்கும். விலைமலிவான மூலப்பொருட்களைக் கொண்டு எளிதாகக் கட்டமைக்கப்பட்டு, பெரும்பாலான வசிப்பிடங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தக்கூடியது. கட்டடங்களின் மேற்கூரைகளில் சேகரிக்கப்படும் மழைநீர், பெரும்பாலும் நல்ல தரமானதாகவும் அதிக தூய்விப்புக்கு உட்படுத்தத் தேவையில்லாமலும் இருக்கிறது. வேறுவகை நீர் ஆதாரம் இல்லாத போது, ஆண்டு மழைப் பொழிவு 200 மி.மீக்கு கூடுதலாக இடங்களில் குடும்பத்தின் குடிநீர் தேவைக்காக மழைநீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்துவது சிறப்பானது.

## பகுதி – ஆ
## எழுதுதல் ( 14 மதிப்பெண்கள்)

4) கடிதம் எழுதுக **[6]**

அ) உங்கள் பள்ளியில் நடைபெற்ற விளையாட்டு விழாவின் சிறப்பினையும், நீ மகிழ்ந்ததையும் குறித்து உன் தோழன் / தோழிக்குக் கடிதம் ஒன்றை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் குழந்தைகள் விளையாடி மகிழ்வதற்கும் பொதுமக்கள் நடைப்பயிற்சி பழகுவதற்கும் ஏற்ற பூங்கா ஒன்று அமைத்துத் தருமாறு வேண்டி மாநகராட்சி ஆணையர்க்குக் கடிதம் ஒன்றை எழுதுக.

(எக்கடிதமாயினும் உமது முகவரி, ச. பொன்னன் / பொன்னி, எண்,29, வள்ளியூர் வீதி, பல்லாவரம், சென்னை – 600 043 எனக் கொள்க)

5) ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்றை எழுதுக. **[8]**

அ) தலைப்பு – குறிப்புச் சட்டகம் – முன்னுரை – நோயற்ற வாழ்வு – வருமுன் காப்போம் – முறையான உணவு முறை – உடற்பயிற்சி – முடிவுரை.

ஆ) தலைப்பு – குறிப்புச் சட்டகம் – முன்னுரை – ஒழுக்கமே வாழ்வின் முதற்படி – ஒழுக்கத்தினால் உயர்வு பெற்றோர் – திருக்குறளில் ஒழுக்க நெறி – முடிவுரை.

இ) தலைப்பு – குறிப்புச் சட்டகம் – முன்னுரை – சுற்றுச்சூழல் – சுற்றுச் சூழலில் ஏற்படும் மாசுகள் – மாசுகளின் வகைகள் – தீமைகள் – தூய்மையின் அவசியம் – சுற்றுச்சூழல் பாதுகாப்பு – முடிவுரை.

## பகுதி – இ
## இலக்கணம் ( 15 மதிப்பெண்கள்)

6) சான்று தருக ( மூன்றனுக்கு மட்டும்) **[3]**

**i) ஒற்றளபெடை**
**அ) இலங்ங்கு ஆ) எடுபப்பதூஉம் இ) கற்ற்றார் ஈ) தொழாஅர்**

**ii) குறிஞ்சி**
**அ) புலி, கரடி ஆ) முயல், மான் இ) எருமை, நீர்நாய் ஈ) வலிமையிழந்த யானை**

iii) முறை நிரல் நிறை
அ) அன்பும் அறனும் உடைத்தாயின் .......
ஆ) மாறாக் காதலர் .......
இ) பொறிவாயில் ஐந்தவித்தான் .....
ஈ) தாழ்ந்த உணர்வினராய் ......

iv) தும்பைத் திணை
அ) அதிரப் பொருதல் ஆ) வட்கார்மேற் செல்லுதல் இ) எதிரூன்றல் ஈ) எயில்காத்தல்

v) மூவசைச் சீர்
அ) வரவேற்பு ஆ) வணக்கம் இ) வந்தனம் ஈ) வருகை

7) நிரப்புக (மூன்றனுக்கு மட்டும்) **[3]**

i) இயற்கையில் அமைந்த இயல்புச் சொற்களை அமைத்துப் பாடுவது ––––––அணியாகும்.
அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) தன்மையணி
இ) தீவக அணி ஈ) சொல்பின்வருநிலையணி

ii) ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் –––– முடிவது சிறப்பு
அ) ஆகாரத்தில் ஆ) ஏகாரத்தில் இ) ஓகாரத்தில் ஈ) இவற்றில் எவையுமில்லை

iii) வைகறை என்பது –––– நிலத்தின் சிறுபொழுது ஆகும்.
அ) நெய்தல் நிலம் ஆ) முல்லை நிலம் இ) குறிஞ்சி நிலம் ஈ) மருத நிலம்

iv) நேர்விடையின் வேறுபெயர் ––––
அ) எதிர்மறுத்துக் கூறுதல்
ஆ) உடன்பட்டுக் கூறுதல்
இ) மறைவிடை
ஈ) உவமைத்தொடர்

v) முற்றுப் பெறாத வினைச்சொல், வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது ––– எனப்படும்.
அ) பெயரெச்சம் ஆ) வினைமுற்று இ) வினையாலணையும் பெயர்
ஈ) வினையெச்சம்

8) கூறியவாறு செய்க (மூன்றனுக்கு மட்டும்) **[3]**

i) காற்று வெளியிடை (தளை கூறுக)
அ) வெண்சீர் வெண்டளை ஆ) இயற் சீர் வெண் டளை
இ) நேரொன்றாசிரியத்தளை ஈ) கலித்தளை

ii) சிறப்பு (அசை பிரித்து வாய்ப்பாடு கூறுக)

அ) நேர் – நாள் ஆ) நிரைபு – பிறப்பு

இ) நேர்பு – காசு ஈ) நிரை – மலர்

iii) நண்பா எழுது (விளி நீக்குக)

அ) நணபன் ஆ) எழுது இ) நண்பா ஈ) நண்பனுக்கு

iv) அமுத மொழி (தொகா நிலைத் தொடராக்குக)

அ) மொழியமுது
ஆ) அமுதம போன்ற மொழி
இ) அழகு மொழி
ஈ) அமுதம் மொழி

v) “பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார்” (எவ்வகை வழுவமைதி)

அ) இட வழுவமைதி
ஆ) கால வழுவமைதி
இ) திணை வழுவமைதி
ஈ) மரபுவழுவமைதி

9) இலக்கணக் குறிப்பு தருக (மூன்றனுக்கு மட்டும்) **[3]**

i) நிலமும் பொழுதும்

அ) கருப்பொருள் ஆ) முதற்பொருள் இ) உரிப்பொருள் ஈ) எவையுமில்லை

ii) ஊறுகாய்

அ) வினைத்தொகை ஆ) உவமைத்தொகை இ) பண்புத் தொகை ஈ) உம்மைத்தொகை

iii) உழுதான் உழவன்

அ) குறிப்புப் பெயரெச்சம்
ஆ) வினைமுற்று
இ) வினையெச்சம்
ஈ) தெரிநிலை பெயரெச்சம்

iv) ஈற்றடி முச்சீராயும், ஏனைய அடிகள் நாற்சீராயும் வருவது

அ) ஆசிரியப்பா ஆ) கலிப்பா இ) வஞ்சிப்பா ஈ) வெண்பா

v) நெய்தல் (தெய்வம் கூறு)

அ) இந்திரன் ஆ) கொற்றவை இ) வருணன் ஈ) திருமால்

10) சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க (மூன்றனுக்கு மட்டும்) **[3]**

i) அ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் – காட்டுக் கோழி, மயில்
ஆ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் – நாரை,அன்னம்
இ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் – கிளி, மயில்
ஈ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் – புறா, பருந்து

ii) அ) இலட்சுமி வந்தாள் என்பது வழு
ஆ) இலட்சுமி வந்தாள் என்பது வழா
இ) இலட்சுமி வந்தாள் என்பது வழுவமைதி
ஈ) இலட்சுமி வந்தாள் என்பது வெளிப்படை

iii) அ) பாடாண் திணை – ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுகிறது
ஆ)பாடாண் திணை – போரின் தன்மைகளைக் கூறுகிறது
இ) பாடாண் திணை – பாடலின் இசையைக் கூறுகிறது
ஈ) பாடாண் திணை – பெண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுகிறது

iv) அ) இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை வருவது வெண்பா
ஆ) இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை வருவது ஆசிரியப்பா
இ) இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை வருவது கலிப்பா
ஈ) இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை வருவது வஞ்சிப்பா

V) அ) பொருள் கொள்ளும் முறை அணி
ஆ) பொருள் கொள்ளும் முறை பொருள்கோள்
இ) பொருள் கொள்ளும் முறை அளபெடை
ஈ) பொருள் கொள்ளும் முறை வழா

## பகுதி – ஈ (36 மதிப்பெண்கள்)
## இலக்கியம் / பாடநூல்

11) பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்து, அதன் கீழ் வரும் வினாக்களுக்கேற்ற விடையை தேர்ந்தெடுத்து எழுதுக **[5]**

சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர். நேர்முக எதிர்முக விளைவுகளை பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபிமானத்தை வாசகர் நெஞ்சங்களில் விதைத்தவர். தன்னையறிதல் என்பதிலும் தன்னை உணர்த்துதல் என்பதிலும் முனைப்பாக இருந்தவர். அவர்தான் ஜெயகாந்தன்.

நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணங்களும் உண்டு. என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு. நான் எழுதுவது முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் எனது தனி முயற்சியின் பயனுமாகும். இந்த நாட்டில் வியாசர் முதல் பாரதி வரை எதற்காக எழுதினார்கள்? இவர்களில் யாராவது கலையைத் தாங்கிப் பிடிக்க என்று சொல்லிக் கொண்டது உண்டா ? இவர்களை விட கலையைத் தாங்கியவர்களும் காலம் காலமாய் வாழும் வாழப் போகும் கலாசிஷ்டிகளைத் தந்தவர்கள் தான் உண்டா? தர்மார்த்தங்களை உபதேசிக்கவே வியாசர் பாரத்தை எழுதினார். தமிழ் இலக்கணமே நூலினியல் ஆவது என்னவென்று சொல்லும் போது

"நூலினியல் நூவலின் ஓரிரு
பாயிர தோற்றி மும்மை யினொன்றாய்
நூற்பொருள் பயத்தலோடு எழுமதந் தழுவி"

என்ற நூலின் பயன் அறம், பொருள்,இன்பம், வீடு என்ற நான்கு பயனுக்காக இருத்தல் வேண்டும் என்று சொல்லி அதன் பின்னர் தான் விளக்கங்களைக் கூறிச் செல்கிறது.

வினாக்கள்

1) _வியாசர் எழுதிய நூல்?
2) மனிதாபிமானத்ததை வாசகர் நெஞ்சங்களில் சேர்த்தவர் யார்?
3) நால்வகை பயன்கள் யாவை?
4) சமூக அமைப்பின் முரண்பாடுகளை அப்பட்டமாக எடுத்து இயம்பியவர் யார்?
5) ஜெயகாந்தன் எதில் முனைப்புடன் இருந்தார்?

12) கீழ்க்காணும் செய்யுள் அடிகளைப் படித்து பொருளுணர்ந்து , அதன் கீழ் வரும் வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. **[4]**

ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்
நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு
தீங்கு உளை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே
ஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேந் என்னா

வினாக்கள்

1) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) திருவிளையாடற்புராணம்
ஆ) சீறாப்புராணம்
இ) பெரியபுராணம்
ஈ) கம்பராமாயணம்

2) இப்பாடலில் 'பணை' என்னும் பொருளைக் குறிக்கும் சொல் எது?
அ) மூங்கில் ஆ) பனை இ) வயல் ஈ) வனம்

3) அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேன்? யாருடைய கூற்று?
அ) புலவர் ஆ) இறைவன் இ) மன்னன் ஈ) முனிவர்

4) இப்பாடலை பாடியவர் யார்?
அ) பரஞ்சோதி முனிவர் ஆ) திருநாவுக்கரசர் இ)சேக்கிழார் ஈ) அப்பூதியடிகள்

13) விடுபட்ட சீர்களை நிரப்புக **[2]**

1) முயற்சி திருவினை ஆக்கும் ________
________ புகுத்தி விடும்.
2) தேவர் அனையர் ________ அவருந்தாம்
மேவன ________ லான்.

14) பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி **[2x5=10]**

1) அல்லில் ஆயினும் இன்மையில் ஆயினும் தனித்து உண்ணும் பழக்கம் பண்டைத் தமிழர்களிடம் இல்லை என்பதை விருந்தோம்பல் பாடல் வழி விளக்குக.
2) ம. பொ.சி யின் சென்னையை மீட்டெடுத்த நிகழ்வை விளக்குக.
3) மனிதனால் காற்று மாசுபடுவதையும் , அதனை தடுக்கும் வழிமுறைகளையும் விளக்குக.
4) நிகழ்கலைகளுள் காவடியாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம் பற்றி விளக்குக.
5) சங்க இலக்கியத்தில் அரசியல் அறம், போர் அறம், கொடை சிறப்பு பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

15) பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி **[2x4=8]**

1) சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் மருவூர்ப் பாக்கத்தின் வணிக வீதிகளை விளக்குக
2) உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையென பரிபாடல் வழி அறிந்தவற்றை குறிப்பிடுக
3) புலவர் இடைக்காடனார் குரலுக்கு இறைவன் செவி சாய்த்த நிகழ்வை விளக்குக.
4) பாலகாண்டத்தில் இடம் பெற்றுள்ள இயற்கையின் அழகு, நாட்டின் பெருமை, ஓசை தரும் சந்த இன்பம் ஆகியவற்றை உம் பாடப் பகுதியின் வழி விளக்குக.

16) ஏதேனும் ஒரு தலைப்பில் துணைநூல் கட்டுரை எழுதுக **[7]**

1) சா.கந்தசாமி எழுதிய பாய்ச்சல் கதையினைத் தொகுத்தெழுதுக.
2) ஸ்டீபன் ஹாக்கிங் – விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கையை எழுதுக
3) “ஒருவன் இருக்கிறான்” கதையை சுருக்கி வரைக.